செய்தி வெளியீடு எண்: 295 நாள் : 15.06.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு. P. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் இன்று (15.6.2016) சென்னை சைதாப்பேட்டை, கால்நடை மருத்துவமனையினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அங்கு கால்நடைகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றி கேட்டறிந்தார். கால்நடைகளுக்கு மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் X-ray, ஊடுகதிர் (Ultra Sound) மற்றும் நவீன பரிசோதனை முறைகள் பற்றி கால்நடை மருத்துவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விளக்கினார்கள். இவ்வாய்வின் போது நாய்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அறுவை சிகிச்சையும், நாய் வளர்ப்பு பிரிவில் வளர்க்கப்படும் நாய்கள் மற்றும் அவற்றின் இனங்களை கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் 2015–16ம் ஆண்டில் சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ்,சைதாப்பேட்டை மாம்பலம் கிண்டி தாலுகா அரசுப் பண்ணை கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் ஆகிய நிர்வாக அலுவலகங்கள் அமைக்க ரூ.29.70 கோடி செலவில் 5 அடுக்கு பல்துறை அலுவலக வளாகம் அமைக்க அறிவிப்பு செய்யப்பட்டு தற்போது ஐந்தாவது அடுக்கு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதன்படி தற்போது கட்டப்பட்டுவரும் புதிய கட்டட பணிகளை பார்வையிட்டு, நடைபெற்று வரும் கட்டடப் பணிகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இப்பணிகளை நல்லமுறையில் துரிதமாக முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள். இந்நிகழ்வின் போது கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**